Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 7 (15-11-65) இதழ் 276

விசுவாவசு ஐப்பசி 30 றஜபு பிறை 20 திங்கட்கிழமை

கண்ணைக் கவரும்
தங்க. வைர நகைகளுக்கு



போன் 585 PHONE 585

K. N. M.

மீறன் சாஹிப்

தங்கப்பவுண் நகை மாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## மணி அடித்தும் நிற்காத பஸ்

யாழ்ப்பாணம், திங்கள்

பஸ் பிரயாணிகள் தாங்கள் இறங்கவேண்டிய இடம் வந்ததும், மணியை அடித்தால், பஸ் அந்த இடத்தில் நிற்பது தான் வழக்கம். ஆனல் பிரயாணிகள் பல தடவை மணி அடித்தாலும் நிற்காத பஸ்கள் சில யாழ்ப்பாணப்பகுதியில் சேவைக்கு விடப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

நேற்று முன்தினம் மாலை சுமார் 6-30 மணிபோல், யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட கீரிமலை-கொடிகாமம் இரட்டை தட்டு பஸ்ஸை அரியாலையில் நிறுத்துவதற்குப் பிரயாணிகள் பல தடவை மணியடித்தும் பயனற்றுப்போனது. அதன்பின் கண்டக்டர் பத்துத்தடவைக்குமேல் மணியடித்தும், பஸ் சுமார் ஒன்றரைமைலுக்கு அப்பால் சென்று நின்றது. அரியாலையில் இறங்கவேண்டிய கைக்

(6-ம் பக்கம் பார்க்க)

# தமிழரின் கல்வி - பிரதமரிடம் எம்.பி.க்கள் புகார்

## தமிழரசு பார்லிமெண்டரி குழு நிலைமையை ஆராயும்

யாழ்ப்பாணம், திங்கள்

**தமிழ்பேசும்மக்களின் கல்விப்பிரச்னைகள் பற்றியும் அவற்றை விரைவில் தீர்க்க வேண்டியதன் அவசியம்பற்றியும் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் சென்ற வாரத்தில் பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவைச் சந்தித்துப்பேசியதாகத் தெரிகிறது.**

தென்னிலங்கையில் தமிழ் பாடசாலைகளும், தமிழ் வகுப்புக்களும மூடப்பட்டு வருவதுபற்றியும் அவற்றை மீண்டும் நடத்துவது பற்றியும் பிரதமரிடம் தமிழரசுக் கட்சித்தலைவர்கள் எடுத்துக் கூறியதாகத் தெரிகிறது.

தென்னிலங்கையில் தமிழ்ப்பாடசாலைகள் மூடப்படாமல் தடுப்பதுபற்றியும், மூடப்பட்ட பாடசாலைகளை மீண்டும் திறப்பதுபற்றியும் தமிழாசிரியர்களின் இடமாற்றப்பிரச்னை, தமிழ் மாணவர்கள் பாடசாலைகளில் சேர்வதில் உள்ள கஷ்டங்கள்பற்றியும் ஆராய்ந்து அவற்றை நிவர்த்திப்பதற்கான திட்டங்களைத் தயாரிக்கவும் தமிழரசுக்கட்சியின் பார்லிமெண்டரிக்குழு இன்றும் நாளையும் கொழும்பில் திரு. செல்வநாயகத்தின் இல்லத்தில் கூடவிருக்கிறது.

## டிசம்பர் 10ல் ஜி. ஜி. வருவார்

யாழ்ப்பாணம், திங்கள்

ஐக்கியநாடுகள் சபைக்கு இலங்கை கோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் சென்றுள்ள யாழ்ப்பாண எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் டிசம்பர் மாதம் 10-ந் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பு வந்துசேருவார் எனத் தெரியவருகிறது.

கொழும்பிலிருந்து 12-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு வருவார் என்றும் அறியப்படுகிறது. அவருக்கு அமோக வரவேற்பளிக்க அவரது ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

## நேருஜிக்கு அஞ்சலி

புதுடில்லி, நவ. 14

மறைந்த தலைவர் ஜவஹர்லால் நேருவின் 76வது பிறந்ததினம் இன்று பலஇடங்களிலும் குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்பட்டது. இன்று அதிகாலையிலிருந்தே குழந்தைகளும் பெரியோர்களுமாக ஆயிரக்கணக்கில் நேருஜியின் சமாதியுள்ள சாந்திவனத்துக்குச் சென்றனர். பாலபவனத்தை சேர்ந்த குழந்தைகள் பஞ்சபூதத்தைக் குறிக்கும்வகையில் ஐந்து செடிகளை சமாதியைச் சுற்றி நாட்டினர். வங்காளக் கலைஞர்கள் ரவீந்திர சங்கீதமும் பிரார்த்தனைக் கீதமும் பாடினர்.

சாந்தி வனத்துக்கு பிரதமர் சாஸ்திரி, திருமதி இந்திரா காந்தி, புதுடில்லியிலுள்ள அமெரிக்கத் தூதரின் மனைவி திருமதி செஸ்டர் பவல்ஸ் ஆகியோர் சென்று அஞ்சலி செலுத்தினர். காலையில் ராம் லீலா மைதானத்தில் நடந்தநிகழ்ச்சிஒன்றில் ஆயிரக்கணக்கான சிறுவர்களும் ஆசிரியர்களும் உடற்பயிற்சி, அணிவகுப்புக்கள் செய்து காட்டினர்.

பிரதமர் சாஸ்திரி இவ் வைபவத்தில் சுருக்கமாக உரை நிகழ்த்துகையில், இன்றைய நவபாரதம் நேரு அமைத்த பலமான அஸ்திவாரத்தின்மீது எழுப்பப்படுகிறது என்றார்.

வியட்நாம்

## அமெரிக்க துருப்புக்களின் எண்ணிக்கை 2 லட்சமாகும்

### நிலத்தின்கீழ் எழும் ஒலிபற்றி அமெரிக்க சிப்பாய்கள் கவலை

வாஷிங்டன், நவ. 14

தென்வியட்னமுக்கு மேலும் அமெரிக்கத் துருப்புக்கள் அனுப்பப்படவிருப்பதாகவும் அடுத்த வருட ஆரம்பத்தில் தென் வியட்னமில் இரண்டு லட்சம் அமெரிக்கத் துருப்புகளிருப்பார்களென்றும் தெரிகிறது. இப்பொழுது ஒரு லட்சத்து அறுபதினாயிரம் அமெரிக்கத் துருப்புக்கள் தென்வியட்னமிலிருக்கின்றன.

நேற்று தென் வியட்னமில் டானங்கிலுள்ள அமெரிக்கத் தளத்துக்குச் சமீபத்தில் இரு அமெரிக்க அணிகளை அழித்துவிட்டதாக வியட்காங்கியர் தெரிவித்தனர். அமெரிக்கத் துருப்புகளுக்கெதிராக வியட்காங் கொரில்லாக்கள் பெருமளவில் நேற்றுத் தாக்குதல் நடத்தினராம்.

### நிலத்தின்கீழ் கேட்கும் சப்தம்!

சைகோனுக்குச் சமீபத்திலுள்ள பெரிய அமெரிக் இராணுவ முகாம் ஒன்றின் நிலத்தின்கீழ் கேட்கும் ஒலியின் மர்மத்தை ஆராய்வதற்கு டாக்டர்கள் நோயைக் கண்டுபிடிக்க உபயோகிக்கும் 'ஸ்ரெதஸ் கோப்' பயன்படுத்தப்படுகிறது. நிலத்தைக் கிண்டுவதுபோல் அந்த ஒலி இருப்பதாகக் கருதப்படுகிறது. வியட்காங் கொரில்லாக்கள் நிலத்தின் கீழ் சுரங்கம் அமைத்துத் தங்கள் முகாமுக்குப் பாதை அமைப்பதாக இராணுவத்தினர் கருதுகின்றனர். இந்த ஒலியால் அவர்கள் கவலையடைந்துள்ளனர்.

முகாமில் நித்திரை செய்துகொண்டிருந்த ஒரு இராணுவச் சிப்பாய் இந்த ஒலியை முதலில் கேட்டதாகவும் பின்னர் மற்றையோரை எழுப்பியதாகவும் அவர்களும் இந்த ஒலியைக் கேட்டதாகவும் தெரிகிறது.

### தென் வியட்னமியர்மீதே குண்டு வீச்சு

டானங்கிற்குச் சமீபத்திலுள்ள ஒரு தென்வியட்னம் கிராமமொன்றின் மீதும் தென் வியட்னம் பொலிஸ் நிலையமொன்றின் மீதும் அமெரிக்கத் துருப்புக்கள் தவறுதலாக மீண்டும் குண்டு வீசினர். பொலிஸ் நிலையம் சேதமடைந்தது. சில தினங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் அமெரிக்கர் தவறுதலாகக் குண்டு வீசினர். இதனல் 30 கிராம வாசிகள் மாண்டனர்.

இப்பொழுதும் தவறுதலாகக் குண்டு வீசப்பட்டதை ஆட்சேபித்து பொலிசார் வேலை நிறுத்தம் செய்திருப்பதாகத் தெரிகிறது.

(பி. டி. ஸி.)

## பணம் பறிப்பதாக புகார்

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சிப் பகுதியில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரிடமிருந்து அவர்களுக்கு பிரஜாவுரிமை பெற்றுத் தருவதாகக் கூறி சிலர் பணம் பறிக்க முயன்று வருவதாக கிளிநொச்சிபாராளுமன்ற உறுப்பினர் யாழ். பொலிஸ் அதிகாரியின் கவனத்திற்குக்கொண்டுவந்துள்ளார்.

இப்படியான சம்பவங்களில் நிர்ப்பந்திக்கப்படும் மக்கள் தம்முடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்றும் திரு.க. பொ. இரத்தினம் கூறியுள்ளார்.

## ஆலோசனைக் கூட்டம்

பம்பலப்பிட்டி, ஞாயிறு

புகையிரதப்பகுதி பாதுகாப்பாளர் சங்கக் காரியதரிசி திரு. ஜே. பி. ஜோசேப்பை புகையிரத ஜெனரல் மனேஜர் வேலையில் நின்றும் தற்காலிகமாக நிறுத்தியதைத் தொடர்ந்து மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆலோசிப்பதற்காக புகையிரதப் பகுதி தொழிற்சங்கங்கள் ஒரு அவசரக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளன.

## சீனத் துருப்புகளை திருப்பிவிட்டன

### சிப்பாய்களின் சடலங்களை எடுத்துச் சென்றுவிட்டனர்

புதுடில்லி, நவ, 14

திபெத்-சிக்கிம் எல்லையில் நேற்று இந்திய காவல் நிலையங்கள் இரண்டின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்த சீனத்துருப்புகள் பின்வாங்கிச் சென்றுவிட்டதாகவும் இந்தியக் காவல் நிலைகள் இந்தியத்துருப்புக்கள்வசமே இருப்பதாகவும் இன்று கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

நேற்றைய துப்பாக்கிப்பிரயோகத்தில்மாண்ட இரண்டு சீனச்சிப்பாய்களின் சடலங்களையும் இந்தியச் சிப்பாயின் சடலத்தையும் அவர்களே எடுத்துச்சென்று விட்டார்களாம்.

இன்றுகாலை புதுடில்லியில் நேற்றைய துப்பாக்கிப்பிரயோகம்பற்றி பிரதமர் திரு. சாஸ்திரி குறிப்பிடுகையில் ''எல்லையில் சீனவும் பாகிஸ்தானும் நமக்குச் சிரமம் கொடுப்பது துரதிர்ஷ்டமானது. நம்மைப் பொறுத்தவரையில் சண்டையை விஸ்தரிக்கும் நோக்கம் இல்லை. இதை சீனவும் பாகிஸ்தானும் உணர்ந்துகொண்டால் நல்லது'' என்றும் கூறினர்.

## சலுகை நீடிப்பு

கொழும்பு, ஞாயிறு

வருமானவரி இலாகாவுக்கு அறிவிக்காமல் தங்களது செல்வங்களை பதுக்கிவைத்திருந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த (வெளிப்படுத்துவதற்கான திகதி) சலுகை மேலும் நீடிக்கப்பட்டிருக்கிறது.

தங்களிடமுள்ள சொத்துக்களை வெளியிடுவதற்கு முன்னைய நிதிமந்திரி டாக்டர் என். எம். பெரேரா கொடுத்திருந்த சலுகை தேசீயஅரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர் நிதிமந்திரி திரு.யு. பி. வன்னிநாயக்காவினல் அளிக்கப்பட்டிருந்த மேலதிக தவணை இப்பொழுது குறிப்பிட்டதொருகால எல்லைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் கொண்டுவரப்பட்ட பட்ஜட்டில்நிதிமந்திரி திரு. யு.பி. வன்னிநாயக்கா செல்வம் மற்றும் நிதி விபரங்களை முன்னர் அறிவிக்காதவகர்கள் வெளியிடுவதற்கு மேலும் கருணை அளித்திருந்தார். ஆனல் நிதிமசோதா சட்டமாக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டுமாதகாலத்துக்குஇந்தவிசேஷ சலுகை அமுலில்இருக்குமென்று நிதி அமைச்சு அதிகாரிகள் இப்போதுதெரிவிக்கின்றனர்.

நிதி மந்திரி திரு. யு பி. வன்னிநாயக்கா தமது பட்ஜட்டில்; கருணை அளிக்கு சலுகையை அக்டோபர் மாதம் முதல் திகதியிலிருந்து நவம்பர் மாதம் முப்ப

(6-ம் பக்கம் பார்க்க)

மணிவாக்கு

நாமெல்லாம் ஒருவிதத்தில் திருடர் என்றே கூறுவேன். எனது உடனடிப்பாவிப்புக்குத்தேவையில்லாதவைதையும் நான் எடுத்துவைத்துக்கொண்டால் அதையாரிடமிருந்தோ நான் திருடியவனேயாவேன். அவ்வப்போதுநமக்குத் தேவையானதை இயற்கையன்னை யளித்திருக்கிருள். ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியதை மட்டும் எடுத்துக் கொண்டால் உலகில் வறுமையோ அன்றிப் பட்டினிச்சாவோ இராது. —மகாத்மா

ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு ஐப்பசி 30 (15 11 65)

# காய்கறிகளிலும் மோசடியா?

வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு போன்ற உப உணவுப் பொருட்களின் இறக்குமதியாளர் நடத்திவரும் மோசடிகளைத் துப்புத் துலக்கி அம்பலமாக்குவதற்காக விசேஷ பொலிஸ் புலன்விசாரணைக் குழுவொன்று அமைக்கப்படவிருக்கிறதென்று ஒரு செய்தி கூறுகிறது. இது நல்லயோசனை தான். என்றாலும் இலங்கையில் குற்றச்செயல்கள் பலவற்றையே துப்புத் துலக்க முடியாமலிருக்கும் பொலிசார் இதில் எந்த அளவுக்கு வெற்றி பெறுவார்கள் என்பது ஐயத்துக்குரியது.

சில்லறைவியாபாரிகள், சுங்கஅதிகாரிகள், பொது மக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பைப் பெறமுடிவதாயின் இதில் வெற்றி கிடைக்கும். உணவுப் பொருள்களின் மொத்த விற்பனையில் மோசடி நடைபெறுகிறதென்பதை சில்லறை வியாபாரிகள் பலர் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். வர்த்தகத்தில் நடைபெறும் மோசடிகளைக் கண்டுபிடித்து அவற்றை நீக்கி வாழ்க்கைச் செலவுப்பளுவைக் குறைக்க தேசிய அரசாங்கம் இதுவரை செய்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. வர்த்தகர்களின் உதவியையும் ஒத்துழைப்பையும் அரசாங்கம் கோரியது; எச்சரிக்கையும் விடுத்தது. நயமாகவும் பயமாகவும் கேட்டும் வாழ்க்கைச்செலவு உயர்வைக் குறைக்க வர்த்தகர்கள் இதுவரை ஒத்துழைப்பு அளிக்கவில்லை பதுக்கல், கொள்ளை லாபம், இறக்குமதியில் மோசடி ஆகிய குற்றங்களுக்கு அவசியமானால் மரணதண்டனை கூடவிதிக்கக்கூடிய கடும் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். அப்பொழுதுதான் இந்த மோசடிகள் ஒழிவதற்கு வழிபிறக்கும். கடும் நடவடிக்கை எடுக்காதவரை மோசடிகளைத் துப்புத்துலக்கிக்கண்டுபிடிப்பதனால் பயன் எதுவும் ஏற்பட்டுவிடாது.

பொருள்களில் நடைபெறும் மோசடியையும் அவைகளின் விலை உயர்வுக்கான காரணங்களையும் கண்டுபிடித்து வாழ்க்கைச்செலவு உயர்வைக் குறைக்கமுயற்சி செய்யும் அதேசமயம் உள்நாட்டில் உற்பத்தியாகும் காய்கறிகளின் விலை உயர்வுக்குக் காரணமென்ன என்பதையும் ஆராயவேண்டியது அவசியம். கொழும்புத் துறைமுகத்தில் வேலை நிறுத்தம் என்றாலும், இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் சண்டையென்றாலும் சுன்னுகத்திலும் நீர்வேலியிலும் மற்றும் இப்பகுதிக் கிராமங்களிலும் உற்பத்தி செய்யப்படும் கீரைப்பிடிகள் மற்றும்காய்கறிகள், வாழைப்பழங்கள் ஆகியவைகளின் விலைகள் திடீரென அதிகரிப்பதற்குரிய காரணம் என்ன? காய்கறிகளைச் செய்கை பண்ணும் விவசாயிகள்கூட இதனால் நன்மை பெறுவதாகத் தெரியவில்லை. தரகர்மாரும் வியாபாரிகளுமே இதிலும் கொள்ளை லாபமடிப்பதாகப் பொதுவாகக் கருதப்படுகிறது. இது பற்றியும் விசாரணை செய்து உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளுக்கும் கூட விலை நிர்ணயிப்பது வாழ்க்கைச் செலவை ஓரளவாவது குறைக்க வழிசெய்யும். இந்த வகையில் நாட்டிலுள்ள உள்ளூராட்சிமன்றங்கள் நியாயவிலைக் கடைகளைத் திறந்து காய்கறிகள் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்க உதவிபுரிய வேண்டுமென உள்ளூராட்சி அமைச்சர் தெரிவித்த யோசனையையும் செயல்படுத்துவது நற்பயனளிக்கலாம்.

## உள்நாட்டு உற்பத்தி


அத்தியாவசியப் பொருள்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்காக மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அடுத்த வருடத்தில் முழு அளவில் 'கோட்டா' வழங்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை இறக்குமதி செய்வது நாட்டின் உடனடிப் பிரச்னையை நீக்குமேயல்லாது வருங்காலத் தேவையைப் பூர்த்தி செய்யமாட்டாது. இந்த வகையில் அத்தியாவசியப் பொருள்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய தொழிலதிபர்களுக்கு மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு ஊக்கமளிப்பது வரவேற்கத்தக்கது.

ஆனல் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சில இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலையைவிட அதிகமாக இருப்பது பற்றியும், அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் சமயங்களில் உள்நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் திடீரென மறைந்து விடுவதுபற்றியும் நன்கு ஆராய்ந்த பின்னரே தொழிலதிபர்களுக்கு மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கானகோட்டா வழங்கப்படுவது நல்லது.

மூலப் பொருள் கிடைக்காத காரணத்தால் மூடப்பட்ட தொழில் நிலையங்கள் மீண்டும் இயங்கவும் வேலையிழந்தவர்களுக்கும் வேலையில்லாதிருக்கும் பலருக்கும் வேலைகிடைக்கவும் அரசாங்கத்தின் இத்தீர்மானம் வாய்ப்பளிக்கும். மூலப் பொருள்களை இறக்குமதி செய்து அத்தியாவசியப் பொருள்களை இங்கு உற்பத்தி செய்ய அரசாங்கம் ஊக்கமும் உதவியும் அளிப்பதை தொழில் அதிபர்கள் நன்கு பயன்படுத்தி நாட்டுக்கும் பொது மக்களுக்கும் நன்மைசெய்ய வேண்டும். உற்பத்திச் செலவைக் குறைத்து உள்நாட்டுப் பொருள்கள் நியாயமான விலையில் பொது மக்களுக்குக் கிடைக்கக் கூடியதாகப் பார்த்துக் கொள்ள வேண்டியது தொழிலதிபர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

# 'ஸ்ரீகிருஷ்ணனந்த முனிவன்'

— கதிர்காமம் —



இலங்கையின் பல பகுதிகளிலிருந்து அடியார்கள், அன்பர்கள், பல பெரியோர்கள் வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவில் சந்நிதானத்திற் கூடி, சென்ற செவ்வாய்க்கிழமை 9-11-65-ல் திருவருட்சூழலில், 'ஆத்மஜோதி', 'சமயசஞ்சரி' என்னும் ஆத்மீகப் பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ க. இராமச்சந்திரனுருடைய எழுபதாவது ஆண்டு ஐந்தியாம் அமிருத மஹோற்சவ வைபவத்தில் பிரார்த்தனையின் மூலமாகவே அமைதியாக வாழ்த்தினுர்கள். அன்று குழுமியிருந்த பல சமயத்தவர்களுடைய அருட்பண்புநிறைந்த முகங்களைக் கண்டதும் ஆனந்தமே பொங்கியது. இப்பேரருட் திருவாளருடைய சமரஸ நெறியின் சிறப்பையும், விஸ்வபக்தியையும் அப்புனித வைபவத்தில் உணரலாயிற்று.

திரு. இராமச்சந்திரனுர் விரும்பியிருந்தால், செல்வாக்குடைய பலர் இவ்வைபவத்தை 'விடிய விடிய மேளச்சமா' வைப்பது போன்று ஆடம்பரமாகக் கொண்டாடியிருப்பார்கள். ஆனுல் ஆடம்பரம், ஆத்மீக வாழ்வில் அருவடுக்கத்தக்கது என்றுறுதிக்கிவிட்டார். பிரார்த்தனைக்குப்பின் சொற்ப நேரத்தில் கூட்டம் பூர்த்தியாயிற்று. திரு. வி. எப். குணரத்ன இளைப்பாறிய அரசாங்க தர்மகர்த்தா, அமிருத மஹோற்சவ ஞாபகார்த்த வெளியீடாகிய 'மெய்யடியார் அருளுறவில்' என்னும ஆங்கில நூலை திரு. இராமச்சந்திரனுடுக்கு வழங்கி அவருடையசமரசசமய உலக சமாதான சேவையைப் பாராட்டி வாழ்த்தினுர்கள். பிரபல பௌத்த சமரஸ் அன்பரும், இராமக்கிருஷ்ண மடத்து நிர்வாகக் கமிட்டியின் பல வருட அங்கத்தவருமாகிய முகாந்திரம் பி. வக்வெல்லவும் பேசினர்.

தமிழருடையகலாச்சாரப் பண்புக்கும், சைவங்கண்ட சமரஸ நன்றிக்கும் யாம் பெருமைப்படும், உதாரண புருஷராய் திரு. இராமச்சந்திரனுர் எமது மத்தியில் இருக்கக் காணும்பொழுது தமிழ் இனத்துக்கே பெருமை தருவதாகக் காண்கின்றோம். ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று புறநானூறு வரையறுத்த தமிழனுடைய உன்னத அன்பு, அருள் முதலியவற்றைப் பிரதிபலிக்கும் இந்த இலட்சிய வாசகம் எமது பெரியாருக்குச் சாலப்பொருந்தும். அவர் உலகத்தில் சென்றஇடமெல்லாம் தனது சொந்த ஊராகப்பழகி அங்குள்ள அறிஞர், மேதைகளையும், பண்புடைப்பெரியோர்களையும் தனது அன்புகனிந்த ஆத்மநேய அன்பர்களாகக்கொண்டுள்ளார்கள் இத்தகைய அன்பு அபிமானத்தினுல், இருக்கு ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட நூலை அங்கே ஜெர்மன், சுவீடிஷ் பாஷைகளினும் மொழிபெயர்ப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் இந்நூல் அன்பர்கள் முயற்சியில் அச்சிட்டு வழங்கப்படும். இத்தகைய இனிய நூல் தமிழில் மொழிபெயர்க்கப் படுவது பேச்சளவிலிருக்கின்றது.

''சமயமஞ்சரி'' என்னும் ஆங்கில சஞ்சிகை மூலம் சர்வ சமயங்களின் ஒற்றுமையை விளக்கி, அதனடிப்படையில் கருணை, ஆன்மநேயத்தை வளர்த்துப் பேதங்களையும், பூசல்களையும் ஒழித்து, உலகசமாதானம் நிலவ நிலைபெறுன உலகத்தொண்டை ஆற்றியுள்ளார் என்று உலகெங்கணும், பூசனைக்குரிய மெஞ்ஞானிகள், தத்துவ ஞானிகள், சர்வகலாசாலைப் பேராசிரியர்கள் அறிஞர்கள், ஆத்மீக அன்பர்கள, இராஜ குடும்பத்தினர் பலர் ஆராஆன்புடன் இன்றும்போற்றுகிருர்கள். இதன் விளைவாக, திருவடுட்சித்தம் போலும், மேலைத்தேச அன்பர்கள் முயற்சியால், கனடாவில் உள்ள ஒரு சர்வதேச பிரபல கலாச்சார ஸ்தாபனம் எமது தமிழ்மேதைக்கு'' தத்துவ கலாநிதி'' பட்டத்தை 1956-ம் ஆண்டு வழங்கியது.

உலக சமாதானத்தொண்டுகான நோபல்பரிசு வழங்கப்பட்டபெல்ஜியதேசத்துவணபிதா டொதுனிக்பியர் அடிகள் தம்மைவிட மேம்பட்ட உலகசமாதானப்பணியை திரு. இராமச்சத்திரனுர் ஆற்றியுள்ளாரெனப் போற்றியிருப்பதொன்றே மேற்கத்தியநாடுகளில் இவருக்கும் ''சமய மஞ்சரி''க்கும் நிலவும் பெருமதிப்புக்குச்சான்றுகும்.

இந்தியாவில் விளங்கிய உலகறிந்த மகாஜானிகளுள் பலர், ஸ்ரீ. க. இராமச்சந்திரனுர் இல்லறத்தவராயினும், அவரது அருட்பெருமையையும், தொண்டின் அளவிறந்த திருவருட்சிறப்பையும் தீர்க்கதரிசனமாய்க் கூறி ஆசீர்வதித்துள்ளார்கள். இம் மெய்ஞானியருடைய ஆசியே இவ்வருட்செவ்வருடைய வாழ்வுக்கும் பணிக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துள்ளது. இது மட்டுமல்ல. இவருக்கு இம்மைக்கும், மறுமைக்கும் அழியாத அருட்செல்வமுமாயிற்று. திருவண்ணமலை ஞானபானுவாய் அவதரித்த ஸ்ரீ ரமண மகரிஷிகளை இவர் குருவாகக்கொண்டு பூரண பக்தி பூண்டவர். மகரிஷிகளே, இவரைப்பற்றி மற்றும் அன்பர்களுக்குக் கூறச் சந்தர்ப்பம் எழுந்தபோது ''ஆசிரமத்து நல்ல பக்தர்'' எனத் திருவாய்மலர்ந்து தமது அடியவனைக் குறிப்பிட்டது இவருடைய குன்றுத பாக்கியமாகும். ஒப்பற்ற ஞானமூர்த்தி, ரமண மஹிரிஷியால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கருணைப்பிரசாதம் பெற்ற உத்மசீஷரான இராமச்சந்திர அடியவருடைய பெருமை சொல்லுந்தரமோ? ஸ்ரீ ரமணரே மகான், ''மற்றவர்கள் என்ன சாமிகள்'' என்ற அசட்டுத்தனம் எள்ளளவும் இப்பேரருளாளர் உள்ளத்திற்கிடையாது. இந்தியாவிலே பல க்ஷேத்திரங்களைத் தரிசித்து, பல மகான்களைத் தேடித் தேடித் தரிசித்து மெய்யன்பு பூண்டார். இவருடைய மெய்யன்பைத் திருநோக்காலுணர்ந்து மகான்கள் அனைவரும் ஆசீர்வதித்து அருட்பிரசாதம்வழங்கினுர்கள். ''யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்றுற்போல், இம் மகான்களை மற்றும் பலரும் தரிசித்துய்யவேண்டுமென்றெண்ணி. தான் கண்ட மகான்களுடைய சரிதத்தை பத்திரிகை மூலமும், பிரசங்கங்கள் மூலமும், குறும் பிரசுரங்கள்வாயிலாகவும் பிரசாரம் செய்து மகான்களுடைய திருவடியைப் போற்றலானுர்.

''பின்னே திரிந்து உன்
அடியாரைப் பேணிப்
பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று
கொண்டேன்''

என்று ''அபிராமியந்தாதி'' அருளுவதுபோல், இவருடைய முன்னைப் புண்ணியப் பயனுல் இத்தனை மகாஞானிகளுடைய ஆசியும் பெறும் பாக்கியவானுரானுர்கள். இந்தியாவில் எப்படி யாத்திரை செய்தாரோ, அதே ரீதியில் உலக நாடுகளுக்குச் சென்றபொழுதும், ஒரு யாத்திரியாகவே சென்று, அருட் பதிகளையும், அருளா

(5-ம் பக்கம் பார்க்க)

# ரொடீஷியாவுக்கு ஐ. நா. படையொன்றை அனுப்ப வேண்டும்

## 36 ஆபிரிக்க நாடுகள் பாதுகாப்புசபைக்கு கோரிக்கை

### ரொடீஷியா செல்லும் பொருள்களை எகிப்து பறிமுதல் செய்யும்

நியுயோர்க், நவ. 14

**ரொடீஷியாவில் அயன் ஸ்மித்தின் சட்டவிரோத நடவடிக்கையை மடக்கி அங்குள்ள 40 லட்சம் ஆபிரிக்கர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு ஐ. நா. படையொன்றை ரொடீஷியாவுக்கு அனுப்பிவைக்கவேண்டுமென்று ஐ நா.விலுள்ள 36 ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் ஐ. நா. பாதுகாப்புச் சபையைக் கோரியுள்ளன. ஐ. நா. படையமைக்கத் தாங்கள் துருப்புக்களைத் தந்துதவுவதாகவும் அந்த நாடுகள் தெரிவித்துள்ளன.**

இதேசமயம் அயன் ஸ்மித்தின் சட்டவிரோத ரொடீஷிய அரசாங்கத்துக்கு எதிராக மேலும் பல நாடுகள் பொருளாதாரத்தடை நடவடிக்கைகளை எடுத்துள்ளன. பல நாடுகளில் பிரிட்டிஷ் தூதரகங்களின் முன் ரொடீஷிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன. ரொடீஷியாவுக்கு பொருள்களை ஏற்றிக்கொண்டு சூயஸ்கால்வாய் வழியாகச் செல்லும் கப்பல்களிலிருந்து அப்பொருள்கள் யாவற்றையும் பறிமுதல் செய்வதென ஐக்கிய அரபுக்குடியரசு தீர்மானித்திருப்பதாக மத்திய கிழக்குச் செய்தி ஸ்தாபனம் தெரிவித்திருக்கிறது.

ரொடீஷியா பற்றி விவாதித்த ஐ. நா. பாதுகாப்புச் சபையின் அவசர கூட்டம் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

ரொடீஷியாவில் புரட்சியை ஒடுக்க எடுக்கும் தமது நடவடிக்கைகளுக்கு ஐ. நா. ஆதரவு தரவேண்டுமெனக் கோரும் ஒரு தீர்மானத்தை பிரிட்டன் பாதுகாப்புச்சபையில் தாக்கல் செய்துள்ளது.

இதே சமயம் ஐ. நா.வில் உள்ள 36 ஆபிரிக்க நாடுகளும் பாதுகாப்புச்சபையில் நிரந்தர அக்கத்துவமில்லாத ஐவரிகோஸ்ட் மூலம் மற்ருெரு பிரேரணையைத்தாக்கல் செய்துள்ளது.

ஐ. நா. படையொன்றை அனுப்பி அயன் ஸ்மித்தின் சட்டவிரோத நடவடிக்கைகளை அடக்கி அந்நாட்டில் உள்ள நாற்பது லட்சம் ஆபிரிக்கர்களுக்கும் பாதுகாப்பளிப்பதுடன் பெரும்பான்மை மக்களின் ஆட்சிக்கும் வழிகோல வேண்டும் என்று இப்பிரேரணை கோருகிறது. அயன் ஸ்மித்தின் சட்டவிரோத அரசாங்கத்துடன் ஐ. நா. அங்கத்துவ நாடுகள் எவ்வித தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாதென்றும் எண்ணை, எண்ணைப் பொருள்கள் ஏற்றுமதியை நிறுத்துவதுடன், தபால், ரயில்தொடர்புகளை முறித்துக்கொள்ளவேண்டுமென்றும் அந்தப்பிரேரணை கூறுகிறது. ரொடீஷியாவுக்கு ஐ. நா.படை ஒன்றை ஐ.நா. சாஸனத்தின்41 வது 42-வது ஷரத்தின் டிஅனுப்பலாமெனவும் அப்பிரேரணை சுட்டிக்காட்டுகிறது.

### படைபலத்துக்கு பிரிட்டன் மறுப்பு

ரொடீஷியாவில் ஆயுத பலத்தை உபயோகிக்கும் யோசனையைஏற்க பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. ஸ்டீவர்ட் நேற்று பாதுகாப்புச் சபையில் ஏற்கமறுத்தார். படை பல யோசனையை ஆபிரிக்கநாடுகள் பாதுகாப்புச் சபையில் வலியுறுத்தினல் பிரிட்டன் தனது ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்து அதை முறியடிக்கும் என ஸ்டீவர்ட் கூறினர்.

### பிரிட்டன் மீது 'பிராவ்டா' சீற்றம்

ரொடீஷியாவில் அயன்ஸ்மித்ஒருதலைப்பட்சமாகசுதந்திரப்பிரகடனம் செய்தற்கு பிரிட்டனே முழுக்காரணமென 'பிராவ்டா' குற்றம் சாட்டியுள்ளது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'பிராவ்டா'வில் கடுமையான வார்த்தைகளைக்கொண்ட கட்டுரையொன்று ரொடீஷியா பற்றி வெளிவந்துள்ளது.

### இந்தியா கோரிக்கை

ரொடீஷிய நிலைமையை 'அமைதிக்கு ஆபத்து' எனப் பிரகடனம் செய்து ஸ்மித் கூட்டத்தினருடன் தொடர்புகளைத் துண்டித்து அவரின் சட்ட விரோதமான அரசாங்கத்துக்கு எதிராக அரசியல், பொருளாதார ராணுவ தடை நடவடிக்கைகளை உபயோகிக்கவேண்டுமெனபாதுகாப்புச் சபையில் இந்தியப் பிரதிநிதி திரு. ஜி. பார்த்தசாரதி கூறினர். ரொடீஷியாவில் புரட்சியை ஒழிக்க பலாத்காரம் உட்பட சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி பிரிட்டனைக்கேட்கவேண்டுமென்றும் பார்த்தசாரதி கூறினர். ரொடீஷியாவின் இன்றைய நிலைக்குப் பிரிட்டனேகாரணமென்றும் அவர் கூறினர்.

### ஆர்ப்பாட்டமும் ஆட்சேபமும்

எதியோப்பியாவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகர், தமது காரியாலயத்தின்முன் நேற்றுநடைபெற்ற ஆட்சேபம் பற்றி எதியோப்பிய அரசாங்கத்திடம் நேரடியாகவும் எழுத்து மூலமாகவும் ஆட்சேபம் தெரிவித்திருக்கிருர். ரொடீஷிய ஒருதலைப்பட்ச சுதந்திரப் பிரகடனத்தைஆட்சேபித்து ஆயிரம் பேர் பிரிட்டிஷ் ஸ்தானிகராலயத்துள்நுழைந்து ஜன்னல்கள், கதவுகளை நொருக்கி பிரிட்டிஷ் தேசியக்கொடியைஇறக்கி, காரியாலய அதிகாரிகளை மிரட்டி தூஷித்தனராம்.

கொங்கோ தலைநகரான லியப்போல்ட் வில்லியில் பிரிட்டிஷ், போர்ச்சுக்கல் ஸ்தானிகர் காரியாலயங்களுக்கு எதிரே கொங்கோ சர்வகலாசாலை மாணவர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்து வீதி வழியே ஊர்வலமாகச்சென்றனர்.

தான்ஸானியா தலைநகரானதார்-இஸ்லாமில் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் காரியாலயத்துக்கு எதிரே நடைபெற்ற பலாத்கார ஆர்ப்பாட்டத்தை ஒடுக்க ஆயுதந்தரித்த பொலிசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசினர். ஒரு மணி நேரம் இந்த ஆர்ப்பாட்டம் நீடித்தது. பின்னர் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரிட்டிஷ் தூதரிடம் மன்னிப்புக் கோரவேண்டுமென தான்ஸானியா அதிபர் நியார்ரே கேட்டுக்கொண்டார்.

ரொடீஷியாநிலைமைபற்றி ஆராய ஆபிரிக்க ஐக்கிய ஸ்தாபனத்தின் மந்திரிகள் கட்டக்கூட்டமொன்றை அவசரமாகக் கூட்டவேண்டுமென கொங்கோ பிரான்ஸ்வில்லி அரசாங்கம் யோசனை தெரிவித்துள்ளது.

லண்டனிலுள்ள ரொடீஷிய ஹைகமிஷினர் பிரிகேடியர் அன்ட்ரூஸ் கீன்சாலிஸ்பரிக்குப் பிரயாணமானர். ஸ்கீன் வெளியேறவேண்டுமெனபிரிட்டிஷ் அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது.

ரொடீஷிய புரட்சி அரசாங்கத்துடன் வர்த்தக உறவை அங்கீகரிப்பதில்லையென ஜமெய்க்கா அரசாங்க மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

கென்யாஅதிபர் ஜோமோ கென்யாட்டாவை சந்தித்துப் பேசியதிலிருந்து ரொடீஷியப் பிரச்னை காமன்வெல்த்திஞல் தீர்க்கமுடியாத பிரச்னையல்ல வென்பதை உணர்ந்துகொண்டதாக காமன்வெல்த் தலைமைக் காரியதரிசி திரு. அர்னேல்ட் ஸ்மித் தெரிவித்தார்.

-பி. டி. ஐ., பி. டி.. ஸி

## சிக்கிம் திபெத் எல்லையில் புதிய சம்பவங்கள் இல்லை

### இந்தியத் துருப்புக்கள் சுட்டதாக சீன ஆட்சேபம்

புதுடில்லி, நவ. 14

சிக்கிம்-திபெத் எல்லையில் நேற்றுப் பிற்பகல்வரை சீன துருப்புகளுக்கும் இந்தியத் துருப்புக்களுக்கு மிடையில் நடைபெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தின்பின் வேறு சம்பவங்களெதுவும் நடைபெற்றதாக இன்றுகாலை வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இந்திய காவல் நிலையங்கள் இரண்டின்மீது எழுபதிலிருந்து நூறுவரையான சீனத்துருப்புக்கள் நேற்றுக் காலையில் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய ஆரம்பித்தனரென்றும் இந்தியக் காவல் நிலைகளைக் கைப்பற்றும் எண்ணத்துடன் இத் துப்பாக்கிப்பிரயோகம் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாமென்றும் இந்தியத் தரப்பினர் கருதுகின்றனர். இந்தியக் காவல் துருப்புக்கள் திருப்பிச் சுட்டதாகவும் துப்பாக்கிப்பிரயோகம் பிற்பகல் இரண்டு மணிவரை நீடித்ததாகவும் இரு சீனத்துருப்புக்களுங் ஒரு இந்தியரும் இக்கைகலப்பில் மாண்டனர்.

### சீன ஆட்சேபம்

திபெத்-சிக்கிம் எல்லையில் நேற்று நடைபெற்ற கைகலப்புச் சம்பந்தமாக இந்திய அரசாங்கத்துக்கு சீன ஆட்சேபம் தெரிவித்துள்ளது. நேற்றிரவு பீக்கிங்கிலுள்ள இந்திய தூதரிடம் சீன ஆட்சேபக்குறிப்பு கையளிக்கப்பட்டது. துங்-சுங்- லாபகுதியில் நூறுஇந்தியத் துருப்புக்கள் சீனக் காவல்துருப்க்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகவும் இது பிற்பகல்வரை நீடித்ததாகவும் இந்தியத் துருப்புக்கள்சிலர் சீனப் பிரதேசத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்துச் சுட்டதாகவும் இவ்வித செயல்களை உடனடியாக நிறுத்த இந்திய அரசாங்கம் உத்தரவிட வேண்டுமென்றும் சீன ஆட்சேபக்குறிப்புக்கூறுகிறது. எல்லையில் நிலைமை மோசமடைந்துள்ளதென்றும் சீன தனது குறிப்பில் கூறியுள்ளது.

## "ஆத்திர மூட்டும் செயல்களை உடனே நிறுத்தவும்"

### பாகிஸ்தானுக்கு இந்தியா ஆட்சேபக்குறிப்பு

புதுடில்லி, நவ. 14

இந்தியாவின் கிழக்கு எல்லையில் பாகிஸ்தான் படையினர் தொடர்ந்து ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் இதை உடனடியாக நிறுத்துவற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் பாகிஸ்தான் அரசாங்கத்தை இந்திய அரசாங்கம் கேட்டுள்ளது.

இந்தியரின் சொத்துக்களுக்கு ஏற்படுத்திய சேதத்துக்கு நஷ்டஈடு தரவேண்டுமென்றும் இந்திய அரசாங்கம் கேட்டுள்ளது.

கிழக்கு அரங்கில் பாகிஸ்தான் துருப்புக்களின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளையும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டுமென இந்திய அரசாங்கம் சென்ற செப்டம்பர் மாதத்திலிருந்து 16 தடவைகள் ஆட்சேபக் குறிப்பு அனுப்பியிருந்தும் இதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் செவிசாய்க்கவில்லையென்று இந்தியா தெரிவித்துள்ளது. மேற்கு வங்காளம், கிழக்குப் பாகிஸ்தான் துருப்புக்கள் தொடர்ந்து வலுத்தாக்குதல் நடவடிக்கைகளிலீடுபட்டு வருவதாகவும் நேற்று முன்தினம் நாடியாஜில்லாவில் இரண்டுமணி நேரம் பாகிஸ்தான் துருப்புக்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இதனால் இந்திய பிரஜைகளின் உடமைக்கும் உயிருக்கும் சேதம்ஏற்படுத்தியதாகவும் இந்திய அரசாங்கத்தின் ஆட்சேபக் குறிப்பு கூறுகிறது.

லட்சுமி நகரில் பாகிஸ்தான் விஷமிகள் வீடுகளுக்குத் தீ வைத்ததாகவும் அக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் மூலம் இந்த ஆட்சேபக் குறிப்பு பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

---

### 'போர் முறை தெரிந்த நாடு'

--நந்தா கருத்து

புதுடில்லி, நவ. 14

இரண்டாவது யுத்தத்துக்கு பாகிஸ்தான் தயார் செய்து வருவதாகத் தெரிகிறது. யுத்தத்தை பாகிஸ்தான் விரும்பிஞல் இறுதி வரை அதற்குப் பதில் சொல்ல இந்தியா தயாராக இருக்கிறது. பாகிஸ்தானின் அபாயம் எபோதைக்குமே இல்லாமல் செய்யவும் நாம் தயாராக இருக்கிருேம்'' என்று இந்திய உள்விவகார மந்திரி திரு. குல்சாரிலால் நந்தா லாகூர் முனையில் டோக்ரா, பர்கி ஆகிய இடங்களுக்குச் சென்று திரும்பியபின் கூறினர்,

"இந்தியாவும் போர்முறை தெரிந்த நாடாக மாற வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அப்பொழுது தான் சீன, பாகிஸ்தான் பிடியில் சிக்காமல் நாம் சுதந்திரமாக வாழமுடியும்" என்று திரு. நந்தா கூறினர்.

---

### கப்பல் சேதம்

பீக்கிங், நவ. 14

தேசிய சீனவின் இரண்டு யுத்தக் கப்பல்களை நவசீன யுத்தக் கப்பல் ஒன்று தாக்கிச் சேதம் விளைத்ததாக நவசீன செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

## "நேருகாட்டிய பாதையில் செல்ல உறிதிபூண்டு விட்டோம்"

### நேரு ஜெயந்தியில் பிரதமர் சாஸ்திரிசெய்தி

புதுடில்லி, நவ.14

ஜவஹர்லால் நேருகாட்டிய பாதையில் செல்வதற்கு நாடு உறுதி கொண்டிருக்கிறதென்று இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர்சாஸ்திரி, மறைந்த தலைவர் நேருஜியின் 76-வது பிறந்ததினத்தை முன்னிட்டு வெளியிட்ட ஒரு செய்தியில் குறிப்பிட்டிருக்கிருர்.

அதிகசுபீட்சத்திற்கும்விரிவான சுதந்திரத்துக்கும் எல்லாவற்றுக்கும் மேலாக ஒவ்வொரு இந்தியனின்கண்ணியத்தை உயர்த்துவதற்கும் நேருகாட்டியபாதையே சிறந்தது'' என்று திரு.சாஸ்திரி தமது செய்தியில் கூறியிருக்கிருர். 'இவற்றைநாம் மனிதகுலத்துடன் பகிர்ந்து கொள்ளலாமென்ற நம்பிக்கையும் எமக்கு உண்டு' என்றும் திரு.சாஸ்திரி கூறிஞர்.

''நமக்கு இன்று ஏற்பட்ட நெருக்கடியின்போது தேசம் காட்டிய ஒற்றுமையும் உறுதியும் நமது அருந்தலைவருக்குச்செலுத்திய பாராட்டு என்றே கருதுகிறேன்'' என்றும் திரு. சாஸ்திரி தமது செய்தியில் குறிப்பிட்டார்.

# 'மாணவர் தொகைக்கேற்ப வசதிகளும் அதிகரிக்கவேண்டும்'

காங்கேசன்துறை, ஞாயிறு

மாணவர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்துள்ளதால் கல்லூரிக்கு மேலும் வசதிகள் அரசாங்கம் செய்துதர வேண்டும்: தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி பெற்ருர். ஆசிரியர் சங்கங்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பில் தற்போது மாணவர்கள் மிக அதிகரித்துள்ளார்கள். 40 மாணவர்கள் கொண்ட இருவகுப்புகளுக்கென கட்டப்பட்ட ஆய்வு கூடங்கள் தற்போதைய தேவைக்குப் போதியனவாகவில்லை. தற்போது 250 விஞ்ஞான மாணவர்களைக் கொண்ட 9 வகுப்புகள் நடைபெறுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு இரசாயனம், பௌதிகம், தாவரவியல், விலங்கியல் ஆகிய பகுதிகளை நடத்துவதற்கு போதிய ஆய்வு கூடங்களைக் கொண்ட விஞ்ஞானகூடம்ஒன்றை அமைத்துத்தருமாறும் விரிவுரை மண்டபங்களும் அமைத்துத் தருமாறு மேற்படி கல்லூரிப் பெற்ரோர்-ஆசிரியர்சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

கல்லூரி மாணவர்கள் விளையாடுவதற்குத் தற்போதிருக்கும் விளையாட்டு மைதானம் போதியதாக இல்லை. இதனை நிவிர்த்தி செய்வதற்காக விஸ்தீரணமான நிலத்தை சுவீகரித்து மாணவர்களுக்கு விளையாட்டுமைதானமாக்கிக் கொடுக்க உதவுமாறு கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

கல்லூரியின் பழைய மாணவர்சங்க உபதலைவர் திரு. எஸ். நடராஜா செனட்டராக தெரிவுசெய்யப்பட்டதைமுன்னிட்டு, அவருக்கு ஒரு வரவேற்பளிப்பதெனவும் கூட்டத்தில்முடிவு செய்யப்பட்டது.

கல்லூரி அதிபர் திரு. டி. ஜே. ஜெயரத்தினம் வைபவத்துக்குத் தலைமைதாங்கினர்.

REGAL—JAFFNA
NOW SHOWING!
VINCENT PRICE
in
JULES VERNE'S
MASTER OF THE WORLD

## கோயில்வீதியில் திடீர்மரணம்

பருத்தித்துறை, ஞாயிறு

தொண்டமானுறு செல்வச்சந்நிதி ஆலய தெற்கு வீதியில் சுமார் 65 வயதுடைய சுப்பையா என்னும் இந்தியர் திடீர் மரணமானுர்.

கடுமையான வயிற்ருேட்டத்தால் அவர் பாதிக்கப்பட்டிருந்தாரென மரண விசாரணையின்போது தெரிய வந்தது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். இராமநாதன் இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

கிங்ஸலி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ராஜ் (நீர்கொழும்பு)
தீவொளி (நுவரேலியா) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2, 6, 9-30 மணிக்கு
தென்ஞட்டில் 30 வாரங்களுக்குமேல் ஓடி திரைப்பட வரலாற்றில் புதிய சாதனையை ஏற்படுத்தியிருக்கும் மகத்தான வெற்றிச் சித்திரம்!
''நான் ஆணையிட்டால்—அது நடந்துவிட்டால்—இங்கு ஏழைகள் வேதனைப் படமாட்டார்''
எம். ஜி ஆர். — சரோஜாதேவி
(இருவேடங்களில்)
ரங்காராவ், நம்பியார், தங்கவேலு, ரத்னு, பண்டரிபாய், நாகேஷ், மாதவி, விஜயலக்ஷ்மி
நடித்த



விஜயா கம்பைன்ஸ்
எங்கவீட்டுப் பிள்ளை
([illegible]கலர்)

## உருளைக்கிழங்கு செய்கைக்கு பரிசில்கள்

இணுவில், ஞாயிறு

அண்மையில் இணுவில் தேசிய விவசாயிகள் கழகத்தின் நிர்வாகசபைக்கூட்டம் கூடியபோது உருளைக்கிழங்கு செய்ய விரும்பும் கமக்காரர்களுக்கு சங்க சார்பில் தேவையான உருளைக் கிழங்கு பெற்றுக் கொடுப்பதென்றும், கூடுதலாக செய்கை பண்ணும் விவசாயிகளுக்கு பரிசில்கள் கொடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதற்கான நடவடிக்கைகளை கழகச் செயலாளர் தீவிரமாக எடுத்து வருவார்.

## சொற்பொழிவும் பிரார்த்தனையும்

இணுவில், ஞாயிறு

'முருகன் பெருமை' என்னும் விடயம்பற்றி திரு. வே. குமாரகுலசிங்கம் இணுவில் ஸ்ரீ சிவகாமி அம்மன் கோவில் மண்டபத்தில் இணுவில் தியாக சத்திய ஜீவன சன்மார்க்க இயக்கத்தின் ஆதரவில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினுர் இதையடுத்து கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெற்றது. சங்கக் காரியதரிசி திரு த. கந்தையா திரு. த. குணரத்தினம் உட்பட பலர் பேசினுர்கள்.

## வாழ்க்கைச் செலவை குறைக்கச் சபை


புங்குடுதீவு, ஞாயிறு

நெடுந்தீவு மத்தியில் 5 பேர் கொண்ட மக்கள்சபை ஒன்று நெடுந்தீவு காரியாதிகாரி திரு. எஸ். அந்தோனிமுத்துவால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. அதன் கடமையை விளக்கிய காரியாதிகாரி வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு தம்முடன் ஒத்துழைக்கும்படியும், ஒவ்வொரு கடைகளிலும் பொருட்களின் விலைப்பட்டியல் பொறிக்கப்பட்ட அட்டவணைப் பலகைகளைத் தொங்கவைக்கிருர்களா என்று கவனிக்கும்படியும், கட்டுப்பாட்டு விலைகளை மீறி விற்பவர்களைத் தமக்கு அறிவிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். இச்சபைக்கு அப்பகுதி கிராமசேவையாளர்களே காரியதரிசியாக இருப்பார்கள் என்றும் கூறினுர்; தொடர்ந்து எப்படி வாழ்க்கைச் செலவைக் குறைக்கலாம் என்றும் ஆராயப்பட்டது.

## விவசாயிகளுக்கு பாதுகாப்பு

சென்னை, நவ. 14

தமிழ் நாட்டில் நிலமற்ற விவசாயிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு நிரந்தரக் குத்தகைச் சட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசாங்கம் விரைவில் கொண்டுவர விருப்பதாக தமிழ்நாடு முதலமைச்சர் தெரிவித்தார்.



சமீபத்தில் யாழ்ப்பாணப் பகுதிக்கு விஜயம் செய்த கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப்குணவர்த்தன தெல்லிப்பழையிலுள்ள 'எல்பிகெம்' வாளித் தொழிற்சாலைக்கு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் சென்று பார்வையிட்டார். மந்திரியையும் திரு செல்வநாயகத்தையும் தொழிற்சாலை அதிபர் திரு. சின்னத்தம்பி அழைத்துச்செல்கையில் எடுத்த படம் இது.

## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு? இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணுர்பண்ணை, யாழ்ப்பாணம்.

பெட்டா பார்மஸி
உங்களுக்கு வேண்டிய
மருந்துகள், ரசாயனப் பொருள்கள், மருந்து தயாரிப்பதற்கான பொருள்கள் ரண சிகிச்சைக் கருவிகள் காயங்களைக் கட்டுவதற்கான துணிகள் யாவற்றுக்கும் எம்மிடம் வரவும்
வி. பி. பி. ஓடர்கள் ஏற்கப்படும்
23, டாம் வீதி கொழும்பு-12 போன் 7213

சிரமதானப் பணியில்

# மயானம் திருத்தப்பட்டது

உரும்பராய், ஞாயிறு

உரும்பராய் கிழக்கு இளங்காடு மயானம் திருத்தும்பணி சிரமதான அடிப்படையில் உடும்பராய் கிழக்கு கிராமமுன்னேற்றச்சங்கத்தின் தலைமையில் நடைபெற்றது உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. பெருமையினார், வலி.கிழக்கு காரியாதிகாரி, சிரமதான தொண்டர்கள் உட்பட பலர் ஊர்வலமாக சிரமதான முகாமிற்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. பெருமையினார் சிரமதானபணியை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் எல்லா உதவிகளுக்கும் அரசாங்கத்தை நம்பியிராமல் தங்களுக்குத் தாங்களே உதவிசெய்பவர்களுக்கு அரசாங்கமும் சில உதவிகளைச் செய்யும். 200க்கு மேற்பட்ட தொண்டர்கள் கூடி இவ்வித பணியில் ஈடுபடுவது பெருமைக்குரியது. கி. மு. சங்கங்கள் மூலம் பல காரியங்களை சாதிக்க முடியும். இச்சங்கம் இப்படி நல்ல பணி செய்வதை நான் மெச்சுகிறேன் என்று கூறினார்.

நீர்வேலி கிராமசபை தலைவர் திரு. எஸ் குலசிங்கம் பேசுகையில், கிராமச் சபையிலிருந்து 14,000 ரூபா வருடமொன்றுக்கு கிடைக்கிறதென்றும் அதில் இப்படியான செலவுகளுக்கு பணம் போதாதென்றும் கூறினார். 7-ம் வட்டார அங்கத்தவர் திரு. சி. கனகசுந்தரம் பேசுகையில், கி. மு. சங்கம் செய்த வேலைகளையும் செய்யப் போகும் வேலைகளையும் விரிவாகக்கூறி, அரசாங்க உதவி அதிபரிடம் ஒரு மகஜரைச் சமர்ப்பித்தார்.

கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேற்பிள்ளை, உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை அதிபர் திரு. சி. பொன்னுத்துரை உட்பட பலர் சொற்பொழிவாற்றினர்.

## எம். பி. மீது பட்டினசபை கண்டனம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

''ஊர்காவற்றுறை தொகுதிக்கு விஜயம் செய்யும் எவ்வமைச்சரும் அல்லது பிரமுகர்கள் முதலாக ஊர்காவற்றுறைப் பட்டினத்திற்கு விஜயம் செய்வதே முறை. அதுவல்லாமல் ஊர்காவற்றுறைப் பட்டினத்தில் பட்டினசபைத் தலைவரே முதன் முதலாக வரவேற்கவேண்டும். இது உள்ளூராட்சி மன்றங்களுக்குள்ள முதல் உரிமைகளில் ஒன்றாகும். இதற்கு முரணாக கைத்தொழில், மீன் பிடி அமைச்சர் 30-10-65 ல் ஊர்காவற்றுறைக்கு வந்தபோது பட்டினசபை வரவேற்ற பிறகு முன் கூட்டுறவுச் சமாஜத்திற்கும், மேஸ் பின்னும் சாலையிலும் அமைச்சரை அழைத்துச் சென்று இறுதியாகப் பட்டினசபைத் தலைவர் வரவேற்க ஒழுங்கு செய்த இடத்திற்குக் கூட்டிச் சென்ற ஊர்காவற்றுறைப் பாராளுமன்ற உறுப்பினரின் பொறுப்பில்லாத தன்மையையும் கடமையுணர்ச்சி இல்லாமையையும் இச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது.

இத்தகைய ஒழுங்குகளை இனிமேலாவது உள்ளூராட்சி மன்றங்களுடன் ஆலோசித்தே செய்யவேண்டுமெனவும் அவ்வுறுப்பினரைக் கேட்பதுடன் இத்தீர்மானத்தைப் பிரதமருக்கும், கைத்தொழில், மீன்பிடி அமைச்சருக்கும், உள்ளூராட்சி அமைச்சருக்கும், தமிழரசுக் கட்சித் தலைவருக்கும், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கும் அனுப்ப வேண்டும்'' என்ற பிரேரணையொன்று 9-11-65-ல் ஊர்காவற்றுறைப் பட்டினசபையில் நடந்தேறிய விசேஷ கூட்டத்தில் தலைவர் கொண்டுவந்த மேற்குறித்த பிரேரணை நிறைவேறியது.

## சாரண ஆசிரிய பயிற்சி

யாழ்ப்பாணம், திங்.

இம்மாதம் 5-ம், 6-ம், 7-ம் திகதிகளில் வடமாகாணத்தின் பல பகுதிகளிலுமிருந்து நாற்பது தமிழ் முஸ்லீம் ஆசிரியர்களுக்குச் சாரண இயக்க ஆணையாளர்களால் சாரண ஆசிரியப் பயிற்சி நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் அளிக்கப்பட்டது. இப் பயிற்சியைச் சாரணர் இயக்கக் கொமிஷனர் திரு. ஏ. ஜீ. அரசரத்தினம், ஆணையாளர் திரு. ஜெயரத்தினம், சாரணர் இயக்குணர்கள்: திரு. ஆர். இராசநாயகம், திரு. காந்தமூர்த்தி. திரு. சிவசுப்பிரமணியம், திரு. சாம்தம்பாப்பிள்ளை, திரு சாம்பொன்னையா ஆகியோர் அளித்தனர். பயிற்சி முடிந்ததும் ஆசிரியர்களுக்குச் சின்னஞ் சூட்டுவிழா நடைபெற்றது.

சாரணக் கமிஷனர் திரு. அரசரத்தினம் பேசுகையில், சாரணர் இயக்கத்தின்மூலம் நாட்டில் நல்ல பிரஜைகளை உருவாக்க முடியுமென்றும் அந்த நோக்கம் நிறைவேற சாரணர் பயிற்சி ஆசிரியர்களுக்கு அவசியமென்றும், இந்த நாற்பது ஆசிரியர்களும் பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குச் சாரணப் பயிற்சி அளித்து நாட்டிற்கும் சமூகத்துக்கும் உழைப்பார்களென்று தாம் நம்புவதாகவும் கூறினார்.

ஈற்றில் ஆசிரியர் திரு. சு. சிவநாயகமூர்த்தி பயிற்சியைத் திறம்பட அளித்த சாரணர் இயக்க ஆணையாளர் மற்றும் இயக்குனர்கள் யாபேருக்கும் சாரண பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் சார்பில் நன்றி கூறினார்.

## பிறந்ததின கொண்டாட்டம்

பருத்தித்துறை, ஞாயிறு

அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவரும் யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் 64-வது பிறந்ததினத்தை பருத்தித்துறை தமிழ்க்காங்கிரஸ் வாலிபமுன்னணியினர் சிறப்பாக கொண்டாடினர்.

நகரசபைத் தலைவர் திரு. ந. நடராசா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திருவாளர்கள் த. பத்மநாபன், எஸ். இரத்தின சபாபதி, வே. ஸ்ரீஸ்கந்தராசா முதலான பலர் சொற்பெருக்காற்றினர்.

## மரண விசாரணை அதிகாரிகள்

திருக்கோணமலை, ஞாயிறு

''சகல உள்ளூராட்சி மன்றத் தலைவர்களையும் திடீர் மரணவிசாரணை அதிகாரிகளாக நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.'

இம்மாத இறுதியில் மொரட்டுவையில் நடைபெற இருக்கும் அகில இலங்கை நகர சபைகள் மகாநாட்டில் மேற்கண்டவாறு கூறும் பிரேரணையொன்றைக் கொண்டு வருவதற்கான முன்னறிவித்தலை திருக்கோணமலை நகரசபை சார்பில் அதன் தலைவர் டாக்டர் சி. சிவானந்தன் கொடுத்துள்ளார்.

இசைக் கலைஞர்களுக்கு

# நியமனம் வழங்குமாறு வற்புறுத்தி யுள்ளோம்

## இசை அரங்கேற்றத்தில் எம். பி.

சுழிபுரம், ஞாயிறு

''கடந்த அரசாங்கம் விட்டுவந்த தவறுகளை இன்றுள்ள அரசாங்கம் செய்யுமானால் அதைநாம்பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம். எனது பகுதியிலுள்ள அநேக பாடசாலைகளுக்கு இசைக்கலைஞர்களை நியமிக்க வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டியும், போதிய பட்டதாரிகள் நம்மத்தியிலிருந்தும் அவர்களை அவ்விடங்களுக்கு நியமிக்கும்படி கோரியும் எதுவுமே கவனிக்கப்படவில்லை. நாம் தற்போதைய கல்வி அமைச்சரிடம் இசையாசிரியர்களின்நியமனம் சம்பந்தமாக பல வேண்டுதல் விட்டும் கவனிக்கப்படவில்லை. கல்வி சம்பந்தமான கோரிக்கைகளை பிரதமர் டட்லி சேனநாயகாவிடமும் சமர்ப்பித்து உடன் கவனிக்கும்படி வேண்டியுள்ளோம்'' என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பொன்னாலை சங்கீத பூஷணம் வ. உருத்திரனின் இசை அரங்கேற்ற விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். பொன்னாலை சமூகத்தொண்டுச் சங்கத்தின் ஆதரவில் பொன்னாலை வரதராசப் பெருமாள் ஆலயத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திரு. அ. அமிர்தலிங்கம் தலைமைவகித்தார்.

திரு. அ அமிர்தலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:-

''எமது பாரம்பரியமான இசைச் செல்வத்தைக்கட்டிக்காத்து மேலும் வளர்ச்சியடையச்செய்துவரும் கலைஞர்களின் தொண்டை நாம் பாராட்ட வேண்டும். அவர்களுக்கு வேண்டிய ஊக்கத்தையும் ஆதரவையும் எமது மக்கள் கொடுக்கவேண்டும். திருமண வைபவங்களுக்கும் மற்றும் விசேஷ வைபவங்களுக்கும் எமது இசைக்கலைஞர்களை அழைத்து ஊக்குவிப்பதுடன் ஆதரவும் கொடுக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் முன்னேறமுடியும். ஒரு சிலர் திறமையடையவும் மற்றவர்கள் மறைந்துபோகவும் காரணம் சுய முயற்சி இல்லாமையேயாகும். முயற்சியுடன் எடுத்த காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.''

இசைப்புலவர் ந. சண்முகரத்தினம் மிகவும் திறமை மிக்கவராக இன்று விளங்குகின்றார். அவர் போல் மற்றவர்களும்திறமையுடையவர்களாக திகழவேண்டும்.

சங்கீத பூஷணம் முத்துக்குமாரசாமி பேசுகையில், கடந்த காலங்களில் வெளிநாடுகளுக்கு சென்று கல்வி கற்பதற்கு பல தடைகளை தாண்டிச் சென்றும் இன்று மிகவும் கஷ்டமான நிலைமையிலேயே வாழ்கின்றோம் என்றும் இந்த நிலைமையை இன்றுள்ள அரசாங்கமாவது போக்க முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

பொன் முத்துக்குமாரன் பேசுகையில் கூறியதாவது: ''எந்த நாட்டிலும் எந்த சமயத்திலும் காண முடியாத சிறப்பை எமது மக்களிடம் காணலாம். அது என்ன? இசையிலே பிறந்து இசையிலே வாழ்ந்து இசையிலே இறைவனை வணங்கி இசையிலேயே மடியும் வாழ்வுதான் அது. இப்படியாக வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து இசையில் மூழ்கியவர்கள் நம்மவர்கள். எந்தத்துறையில் மேம்பாடுடையவர்கள் அதிகம் வாழ்கின்றார்களோ அங்கே ஓர் அறிஞன், திறமையாளன் கட்டாயமாக பிறப்பான். அதே போல் எமது பகுதியிலுள்ள இளம் கலைஞர்கள் மிகவும் திறமையுள்ளவர்களாக வளரவேண்டும்''

திரு. தி. ச. வரதராசன் (வரதர்) வரவேற்புரை நிகழ்த்தினார். இசைப்புலவர் ந. சண்முகரத்தினம், திரு. த. குமாரசாமிப் புலவர் ஆகியோர் ஆசியுரைகள் வழங்கினர். குருவணக்கத்தையடுத்து இசைக் கச்சேரி நடைபெற்றது.

## 'ஸ்ரீ கிருஷ்ணனந்த...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களையும் தரிசித்தனர். இவருடைய பணிவும், பண்பும், பக்தியும் உலகெங்கணும் பல பெரியோர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்தது. அடக்கமாக இருந்து பணியாற்றிய பெரியார், அவருக்கே தெரியாது, திருவருளால் அம்பலத்துக்குக் கொணரப்பட்டு உலகெங்கணும் அறிமுகமானார். இவருடைய பெருமையும், உலகத்திலே பல பகுதிகளுக்குச் செல்லும் ''சமய மஞ்சரி'' யின் மூலமாற்றும் சேவையின் பெருமையும் பிரகாசிக்கத் தொடங்கியது. மகான்களும், மற்றும் பெரியோர்களும் உள்ளன்பு பொங்க ஆசீர்வதித்தனர். இன்று ஸ்ரீ க இராமச்சந்திரன் உலக சமாதானத்துக்குப் பெரும் பணியாற்றும் உலக மேதையாகக் கணிக்கப்படுகின்றனர். மேலைத் தேசத்தவர்கள் ஒருபோதும் ஒருவரை உணர்ச்சிவசப்பட்டோ, இன்றேல் மேலெழுந்தவாரியாகவோ கணிப்பதில்லை; ஒருவருடைய சொல்லும் செயலும் சிந்தனையும் எத்துணை உலகிற்பரந்து செறிந்து பயனளிக்கின்றது என்பதை உணர்ந்தே ஒருவரை நுணிகிக் கணிப்பார்கள். இவ்வண்ணமே, பல உலகப் பிரசித்தி பெற்ற மேலைத் தேசப் பெரியார்கள் ஸ்ரீ இராமச்சந்திரனைக் கணித்துப் போற்றுகின்றனர். இவ்வுலக மேதை எமது நாட்டுக்கும் சமூகத்துறையிலும், சமயத்துறையிலும், சமரஸத்துறையிலும் அரும்பணி ஆற்றியுள்ளார்கள். சுவாமி சிவானந்த சரஸ்வதி, சுவாமி இராமதாஸ், அன்னை கிருஷ்ணபாய், கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் இலங்கைக்கு விஜயம் செய்வதற்குப் பிரதான காரணமாய் இருந்தார்கள். இவருடைய அரும் முயற்சியால் இலங்கையெங்கும் அவர்களைக் கொண்டு சென்று மக்கள் தரிசித்துப் பாபவிமோசனம் பெறவைத்த உத்தமர் புண்ணியர் எமது பெரியார். இதனால் பல அன்பர்கள் இங்கு வந்த மகான்களிடம் மந்திரதீக்ஷை பெற்று தம் வாழ்வைப் புனிதமாக்கி ஆத்மீக வாழ்வு வாழ்கின்றனர். அடியேனுடைய ஆத்மீக வாழ்வு விரிந்த மனப்பான்மையுடன் வளர்ந்து, அறவு நெறியில் ஊன்றி நிற்பதற்கு ஸ்ரீ இராமச்சந்திர மேதையின் வாழ்வும், நெறியும் தூண்டுகோலாயிருந்தது. 'வாழ்க இப்பெரியார் பல்லாண்டு' என்று பிரார்த்திப்பதைவிட யாம் வேறென்ன கைம்மாறு செய்யக் கூடும்.

(நாளை முடிவடையும்)


## வரிவிளம்பரம்

### தேவை

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்கு அனுபவம்வாய்ந்த, பிரதிகள் வாசிக்கக் கூடிய 25—35 வயதிற்குட்பட்ட ஓர் இரண்டாவது குருக்களும், அனுபவம்வாய்ந்த 25—30 வயதிற்குட்பட்ட ஜி. சி. ஈ. சித்தியெய்திய ஓர் கணக்கப்பிள்ளை (Clerk) யும் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன் 25-12-65 க்கு முன் தபால் மூலம் பிரம்மஸ்ரீ சு. துரைச்சாமிக்குருக்கள், ஆதீனகர்த்தா, மாவிட்டபுரம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 1373


## புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம். ஞாயிறு

யாழ்ப்பாண மாவட்ட கிராம சபை சமாஜ வருடாந்த மகாநாடு உதவிஉள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் தலைமையில் யாழ். அரசாங்க செயலகத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட கிராம சபை சமாஜ தலைவராக புலோப்பளைக் கிராம சபைத் தலைவர் திரு. ஏ. ஜீ. இராஜசூரியர் தெரிவுசெய்யப்பட்டார். உபதலைவராக சாவகச்சேரி கிராம சபைத் தலைவர் திரு. ஏ. சுப்பிரமணியமும், காரியதரிசியாக கரைச்சிக் கிராம சபைத் தலைவர் திரு. ஆனந்தசங்கரியும். தனாதிகாரியாக பண்டத்தரிப்பு கிராம சபைத் தலைவர் திரு. இ. இராமலிங்கமும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதுடன், பதினொருபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.





# ராதா மின்சார மருந்து

தலையிடி, ஒற்றைத் தலைவலி, ஜலதோஷம், மூக்கடைப்பு, வலிப்பு, நோவு, உளைவு, வீக்கம், நரம்புச் சுளுக்கு, கைகால் முடக்கு, வாதம், பக்கவாதம், மொளிவாதம், மாறாத இரணம் வெட்டுக்காயம், நரம்புச் சிலந்தி, பிளவை, புரையோடும் ஆறாத புண்கள், காதுவலி, காதில் சீழ் வடிதல், பீநிசம், பல்வலி, அரணை, வீக்கம், தேள் விஷம், நாய்கடி இவை வெளிப்பூச்சினாலும், வாந்திபேதி, அஜீரண பேதி, உஷ்ணபேதி, வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், வாய்வு, மாரடைப்பு முதலிய அநேக ரோகங்கள் உள்ளுக்குப் பாவிப்பதாலும் சில நிமிஷங்களில் நீங்கிவிடும்.

விநியோகஸ்தர்கள்:- போன்: 541

எஸ். சுப்பிரமணியம் அன் கோ

53, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். 60, செட்டியார் தெரு

புட்டி ஒன்றின் விலை ரூபா 1-50

வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு

சிககிம் எல்லையில்

# சீன-இந்திய துருப்புக்கள் மோதல்

புதுடில்லி, நவ. 13

**சிக்கிம்**-திபெத் எல்லையில் இன்று சீனத் துருப்புகள் இரு இந்திய காவல் நிலையங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இந்திய செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

இன்று அதிகாலை ஏழுமணிக்கு சீனத்துருப்புகள் இந்திய காவல் நிலையங்கள் இரண்டின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இந்திய துருப்புகள் திருப்பிச்சுட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள் ளது. சண்டைதொடர்ந்து பி. ப. 2 மணிவரைகடுமையாக நடைபெற்றதாகவும் இதன் பயனாக இரண்டு சீனத் துருப்புகளும், ஒரு இந்தியத்துருப்பும் கொல்லப் பட்டதாகவும் அந்தச் செய்தி தெரிவிக்கிறது.

## உகண்டா பிரதமர் கருத்து!

கம்பாலா, நவ. 13

ரொடீஷிய வெள்ளை ஆட்சியாளர் ஒருதலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளதால் எழுந்துள்ள நெருக்கடி நிலைபற்றி ஆராய்வதற்காக உகண்டா பிரதமர் டாக்டர் மில்டன் ஓபோட் தாம் கென்யா, தன்சானியா, சாம்பியா ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் கூடி ஆலோசனை நடத்தப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

திரு. அயன் ஸ்மித்தின் ஒருதலைப்பட்சமான சுதந்திரப்பிரகடனம் ரொடீஷியாவில் எவ்விதமாற்றத்தையும் செய்துவிடவில்லையென்றும் அது இப்போதும் ஒரு பிரிட்டிஷ் காலனியாகவே இருக்கிறதென்றும் அவர் எடுத்துக்கூறியுள்ளார்.

யாழ்ப்பாண —

## அரசாங்க ஊழியர் இடமாற்றம் ரத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலிருந்து அண்மையில் இடமாற்றம் செய்யப்படவிருந்த 10 அரசாங்க சேவை ஊழியர்களின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணம் கச்சேரியில் கடமையாற்றிவரும் மேற்படி ஊழியர்கள் யாழ்ப்பாணத்தில் மூன்று வருட சேவையே செய்திருந்தார்களென்றும் இவர்கள் குறிப்பிட்ட 4வருடசேவைபூர்த்தியாகுமுன் மாற்றம் செய்யப்பட்டது திறைசேரியின் சுற்றறிக்கைக்கு முரணானது என அரசாங்க லிகிதர் சேவை சங்கத்தின் யாழ். கிளை திறைசேரியின் நிரந்தரக் காரியதரிசிக்கு எடுத்துக்கூறியதன் பேரிலேயே இந்த இடமாற்றம் ரத்துசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

## ஜி. ஜி. க்கு வர்த்தக மந்திரி பதவி?

பம்பலப்பிட்டி, சனி

''வர்த்தக அமைச்சர் பதவியிலிருந்து டாக்டர் எம். வி. பி. பீரிஸை நீக்கி அவருக்குப் பதிலாக தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தை நியமிக்குமாறு சில அரசாங்க எம். பி. க்கள் பிரதமரை வலியுறுத்தி வருகின்றனர்.''

இவ்வாறு 'ஜனசக்திய' பத்திரிகையின் இம்மாத 7-ந் திகதி வெளியீட்டில்செய்திவெளியிடப்பட்டுள்ளது.

'டாக்டர் பீரிஸ் வாழ்க்கைச் செலவைக் குறைக்க தக்க நடவடிக்கை எடுக்க தகுதியற்றவர் என இச்சாரார் அபிப்பிராயப்படுகின்றனர்.

கல்வி மந்திரியாக திரு. காமினி ஜெயசூரியாவும், தேசிய மய சேவைகள் மந்திரியாக திரு. டி. பி. வெலகெதரையும் நியமிக்கப்பட வேண்டும் என அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்' எனவும் அந்தச்செய்தி மேலும் தெரிவிக்கிறது.

## இருதாரக் குற்றத்துக்கு சிறையும் அபராதமும்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவில் வசித்தவரான அந்திரிஸ் பெர்ணன்டோ இருதயராசன் பெர்ணண்டோ என்பவர் சட்டரீதியாக இருதாரம் விவாகம் செய்த குற்றத்திற்கு 9 மாதம் கடுழியச் சிறைத் தண்டனையும், 250 ரூபா அபராதமும், அபராதம்கட்டத் தவறினல் மூன்று மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி திரு. ரி.ஜே. இராசரத்தினம் முன்னிலையில் இவ்வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது பெர்ணன்டோவின் முதல் மனைவியான கொழும்பு கிராண்ட்பாஸ் வாசி சுமித்திராவும் மூன்று பிள்ளைகளும் கோர்ட்டிற்குவந்திருந்தனர். கொச்சிக்கடையைச் சேர்ந்த மரியமாணிக்கம் என்ற பெண்ணை பெர்ணன்டோ இரண்டாம் தாரமாக விவாகம் செய்தாராம்.

## கார் பற்றி விசாரணை

பம்பலப்பிட்டி, ஞாயிறு

அண்மையில் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட மொறிஸ் ஒக்ஸ்போர்ட் கார் பற்றி தற்பொழுது லஞ்ச விசாரணை அதிகாரி விசாரணை நடத்தி வருவதாகத் தெரியவருகிறது.

இதுசம்பந்தமாக பலர் லஞ்சப்பகுதியைச் சேர்ந்த விசாரணை அதிகாரிகளினல் விசாரிக்கப்பட்டுள்ளார்களெனவும் தெரியவருகிறது.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், ஞாயிறு

வலி - மேற்கு, வடக்கு பயிற்செய்கைக்குழு சமாஜத்தின்' புதிய நிர்வாகிகளாக பின்வருவோர்தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. ஏ. தையல்பாகர்; உபதலைவர்: திரு. எஸ். எம். அப்புத்துரை; காரியதரிசி: திரு. எஸ். அம்பலவாணர்; தனாதிகாரி: திரு. ஜே. எஸ். சின்னப்பா.

வேலையற்ற

## பட்டதாரிகளும் களை பிடுங்குவர்

பருத்தித்துறை, ஞாயிறு

வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கட்கான விவசாயப் பயிற்சிப் போதனை வகுப்புகள் இம்மாதம் 17-ம் திகதியன்று ஆரம்பமாகவிருக்கிறது.

கரணவாய் தெற்கு கிராமசேவகர் பிரிவில் ஆரம்பமாகி பல கிராமசேவகர் பிரிவுக்கும் விஸ்தரிக்கப்படும்.

மழையின்மையால் தாமதம் ஏற்பட்ட களைபிடுங்கல் சேவையும் 17-ந் திகதியிலிருந்தே ஆரம்பமாகும் எனவும் இப்பணியில் சுமார் 3000 மாணவர்களும் 2500 வளர்ந்தோரும் பலநூற்றுக்கணக்கான படித்த வாலிபர்களும் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்பணியில் வேலையற்ற பட்டதாரிகள் சங்க உறுப்பினர்களும் வேலை வேண்டுவோர் கழகத்தினரும் சேருவார்கள் எனவும் தெரியவருகிறது.

## மணி அடித்தும் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தையுடையபெண்ணும் இரு வயோதிபதாய்மாரும் அந்த இருட்டு வேளையில் வேறுவழியின்றி அமைதியாக இறங்கிச் சென்றனர்.

பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்கள் இச்சம்பவம் பற்றிப்பேசியசமயம், வேலைமுடிந்து அதே பஸ்ஸில் திரும்பிய ஒரு வாலிப கண்டக்டர், டிரைவர்பொல்லாதவர், இப்படியெல்லாம் பேசக்கூடாதென எச்சரிக்கை செய்தார்'

இதன்பின் இதே பஸ்ஸில் நுணுவிலில் இரவு 7 மணிபோல் நான்கு மாணவிகள் ஏறிக்கொண்டனர். அதில் ஒரு மாணவி தான் இறங்க வேண்டிய இடம் வந்தபோது மணி அடித்தார். ஆனல்பஸ் அதிக வேகமாகச் சென்றுகொண்டிருந்ததால் மற்றும் பிரயாணிகள் தொடர்ந்து பலதடவை மணிஅடித்தும் பஸ்நிறுத்தப்படவில்லை. கடைசியில் பொறுமையிழந்த ஒரு பிரயாணி பஸ் சாரதிக்கு அருகில் சென்று பஸ்ஸைநிறுத்துமாறு பலமாகக் கத்தினர். அதன்பின்தான் பஸ் நிறுத்தப்பட்டது. அதுவும் நிறுத்தவேண்டிய இடத்திலிருந்து அரைமைலுக்கு அப்பால் நிறுத்தப்பட்டது.

மின்சாரத்தடை காரணமாக அப்பகுதி வீதிகளிலும் வெளிச்சமில்லை. அம்மாணவி அமதியாகஇறங்கி இருட்டில் நடந்துசென்ருர். இதன்பின் பிரயாணிகளில் சிலருக்கும் பஸ் கண்டக்டர்களுக்கும் வாக்குவாதம்ஏற்பட்டு சாவகச்சேரி பஸ் நிலையத்தில் அப்பிரயாணிகள் இறங்கியதோடு முடிவிற்கு வந்தது.

## சலுகை நீடிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் திகதிவரைக்கும் நீடித்திருந்தார்.

நிதி மந்திரிஅளித்த காலஎல்லை இன்னும் இருவாரகாலத்துக்குள் முடிவடைந்துவிடும். ஆனல் நிதி மசோதா இன்னும் சட்டமாக்கப்படவில்லை. இதன் காரணமாக நிதி மசோதா சட்டமாக்கப்பட்ட திகதியிலிருந்து இருமாத காலத்துக்கு கருணை அளிக்கும் சலுகையை நீடிப்பதென்று நிதி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## 'கிராமசபைகளின் அந்தஸ்தை உயர்த்துமுன் ஆலோசனைதேவை'

### கிராமசபைத் தலைவர்களின் மகாநாட்டின் தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

தற்போதைய கிராமசபைகளின் அல்லது பகுதிகள் அந்தஸ்து உயர்த்தப்படும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட கிராமசபைகளுடன் தொடர்புகொண்டு, அவற்றின் ஆலோசனைகளுக்கு இணங்கவே அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அச்சபைகளின் காலஎல்லை முடிவுறும் நேரத்திலே அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்றும், கரைச்சிக் கிராமசபைத் தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி கொண்டுவந்த தீர்மானம் யாழ்ப்பாணம் மாவட்டக் கிராமசபைத் தலைவர் சமாஜ வருடாந்த மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது

புலோப்பளை கிராமசபைத் தலைவர் திரு. ஏ. ஜி. ராஜசூரியர் தலைமையில் அரசாங்கசெயலகத்தில் இம்மகாநாடு நடைபெற்றது.

திரு. ஆனந்தசங்கரியால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் கிராமசங்கங்களின் கூட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 54 'ஏ' என்ற பகுதி உள்ளூர் ஆட்சி மன்றங்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துவதாலும், அத்தகைய அம்சம் ஆபத்தானதென இச்சபை கருதுவதாலும், அவ்வம்சத்தை அகற்ற ஏற்ற நடவடிக்க எடுக்கவேண்டுமென்று இச்சபை ஸ்தலஸ்தாபன அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறது.

இம்மகாநாடு யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள 42 உள்ளூராட்சி மன்றங்களின் சார்பில் நடைபெற்றது.

கூட்ட ஆரம்பத்தில் யாழ். மாவட்டக் கிராமச்சபைகளின் விசாரணை உத்தியோகஸ்தராக இருந்து அகால மரணமெய்திய திரு. வி. சி. சண்முகத்திற்கும், சிராமசபைத் தலைவர்கள் சமாஜ உறுப்பினராக இருந்து தேகவியோகமடைந்த மானிப்பாய்க் கிராமச்சபைத்தலைவருக்கும் ஆன்மசாந்திக்காக இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது,

சுகதார அமைச்சரால் அனுப்பப்பட்ட யாழ்ப்பாண விடயம் பற்றிய கடிதம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு யாழ்ப்பாண மவட்டத்திலுள்ள கிராமச்சபைகளின் ஆயுள்வேத வைத்தியசாலைகளை விஸ்தரிப்பது பற்றியும் வைத்திய சாலைகளுக்குத் தேவையான மூலிகைவகைகளை யாழ்ப்பாணத்திலேயே தயாரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் கையாளப்படவேண்டியது பற்றியும், யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இயங்கி வரும் இலங்கா ஆயுள்வேதப் பாடசாலையை அரசினர் அங்கீகரிக்கவேண்டும் என்பது பற்றியும் மந்திரியின் கவனத்திற்குக் கொண்டு வருவதென்று தீர்மானிக்கப்பட்டது.

வரணிக் கிராமச்சபைத் தலைவர் திரு.க.ஆறுமுகத்தினல் கொண்டுவரப்பட்ட ''கிராமச்சபை வேலைகளுக்காகவும் கிணறு கட்டடங்களுக்காகவும் அரசாங்கத்தல் தரப்படும் பணத் தொகை முழுவதையும் பெறுவதில் கிராமச்சபைகள் பெரும் சங்கடங்களுக்குள்ளாக வேண்டியிருப்பதால் கிராமச்சபைகளுக்குத் தரப்படும் பணம் முழுவதையும முன்பு இருந்ததுபோல் கச்சேரியில் இருந்து பெறுவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது.

மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மோட்டார் உதிரிப்பாகங்களின்
இறக்குமதியாளர்களே !

ஜப்பான் ஐ. ரி. ஸி. ஓட்டோ
கார்ப்பரேஷனுக்கு
உங்களுக்கு வேண்டிய
(இங்கிலிஷ், கொன்ரினென்டல், அமெரிக்கன்)
முதலிய சகல மோட்டார் வாகனங்களுக்கும்
இணைக்கக்கூடிய உதிரிப்பாகங்களுக்கு

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்
மூலம் ஒழுங்கு செய்து உங்கள் லைசன்ஸ்களை
விவேகமாகப் பயன்படுத்துங்கள்.

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்,
விற்பனைப் பகுதி
மகாராஜா பில்டிங்,
பாங்ஷால் வீதி, கொழும்பு-11
தொலைபேசி எண்: 3603
3634

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.